# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை 13.05.2025 கதிர் 193







## வவுனியாவில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி








வவுனியா, மே 13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு

7➤

# நாட்டை மீட்க அனைவரும் கைகோருங்கள்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

கொழும்பு, மே 13

“நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க அனைவரும் கைகோர்க்க வேண்டும். இதில் அரசாங்கம், எதிர்த்தரப்பு மற்றும் சிவில் சமூகத்துக்குப் பொறுப்புகள் காணப்படுகின்றன. தமது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் விழுந்துள்ள படுகுழியில் இருந்து மீள எழ முடியும்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறை உராபொல ஸ்ரீ ரத்தனஜோதி பிரிவேனா வித்யாயநதத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்று வரும் கல்வி மற்றும் கலாசார கண்காட்சியில் இன்று பிரதம அதிதியாக சஜித் பிரேமதாஸ கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் சியாமோபாலி மகா பீடத்தின் ஸ்ரீ ரோஹண பிரிவின் மகாநாயக்கர், வரலாற்றுச் சிறப்புமிக்க சித்தங்கல்லேன ராஜமகா விஹாராதிபதி, ஸ்ரீ சுகத சாசனதஜ, புகழ்பெற்ற ஸ்ரீ தம்மராக்ஷித வினய விஷாரத சங்கைக்குரிய அகலபட பியசிறி மகாநாயக்க தேரரின் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

7➤

## பாடசாலை மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம்

### ஆங்கிலப் பாட ஆசிரியர் கைது




கொழும்பு, மே .13

மாத்தறை - தெவிநுவர பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயதுடைய மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் ஆசிரியர்

7➤

## வல்வெட்டித்துறையில் இந்திர விழா



வல்வெட்டித்துறை, மே 13

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை மக்களால் நேற்று இந்திர விழா மிகவும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ தீர்த்த திருவிழா சித்திரா பௌர்ணமி தினமான நேற்று இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு இந்திர விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயத்தைச் சூழவுள்ள சுமார் 3 கிலோ மீற்றர் தூர வீதி மின் விளக்கு சேடனைகள், இந்து

7➤

# தேசிய மக்கள் சக்திக்கோ, முன்னணிக்கோ ஈ.பி.டி.பி. ஒருபோதும் ஆதரவு வழங்காதாம்

## கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மே 13

தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முயலும் தேசிய மக்கள் சக்திக்கோ, சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல் நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் வீராப்பு அரசியலை முன்னெடுத்து வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ ஆதரவு இல்லை என்று தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், காத்திரமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி சபைகளை எதிர்கொள்ளவே கட்சி தீர்மானித்திருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

யாழ். ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு

7➤

# வீட்டில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக 19 வயது இளம் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மே .13

கொட்டாவ பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக 19 வயது இளம் பெண் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டாவ, ருக்மல்கம வீதி, விஹார மாவத்தை பகுதியில் வசிக்கின்ற 19 வயதுடைய புடம்மினி துரஞ்சா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது உடல் முற்றிலுமாக எரிந்துவிட்டதாகவும், வீட்டின் சொத்து மற்றும் கூரைக்கு சேதம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் தாயாரும் இரண்டு சகோதரர்களும் வெசாக் கொண்டாட்டத்தை பார்வையிட சென்றிருந்த வேளையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுர தீயணைப்புத் துறையின் அதிகாரிகளும், அப்பகுதி மக்களும் வந்து தீயை அணைக்க நடவடிக்கை எடுத்த போதும், இளம் பெண்ணை காப்பாற்ற முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிபத்து ஏற்பட்டமைக்கான கரணம் தொடர்பில் தகவல்கள் எதுவும் கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுகேகொடை குற்றப்பிரிவு அதிகாரிகள் முன்னேஉடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் நிலவும் உப்பு தட்டுப்பாடு!

கொழும்பு, மே .13

உப்பு இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக, சந்தையில் உப்பு தட்டுப்பாடு நிலவுவதாக உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் 30 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்த போதிலும், அதனை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சந்தையில் உப்பு தட்டுப்பாடு நிலவுவதாக உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் வாரத்தில் குறித்த உப்புத் தொகை கிடைத்த பின்னர் உப்பு தட்டுப்பாடு கட்டுப்படுத்தப்படும் எனவும் உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே சந்தையில் உப்பு விலை அதிகரித்துள்ளதாகவும் இதனால், 1 கிலோகிராம் உப்புப் பொதியை 450 முதல் 500 ரூபா வரையிலான விலையில் வர்த்தகர்கள் விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில் உப்பு விலை தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அதற்கு தேவையான சோதனை நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.




# நீரில் மூழ்கி இரு சிறுமிகள் உயிரிழப்பு

குருநாகல், மே 13

விடுமுறைக்காக உறவினரின் வீடொன்றுக்குச் சென்ற 17, 12 வயது சிறுமிகள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இன்று பகல் குருநாகல் மாவட்டம், கல்கமுவ பகுதியில் உள்ள பாழுகடவல வாவியில் நீராடிக்கொண்டிருந்த வேளையிலேயே இருவரும் நீரில் மூழ்கி மூச்சுத்திணறி சாவடைந்துள்ளனர்.

கம்பஹா மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த சிறுமிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களின் சடலங்கள் கல்கமுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

# யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்து 20 பேர் வைத்தியசாலையில்!

*கொழும்பு, மே .13*

*அலதெனிய, யடிஹலகல பிரதேசத்தில் யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*குறித்த பேருந்து வீதியை விட்டு விலகியமையால் விபத்து ஏற்பட்டுள்ளது.*

*நேற்று இரவு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.*

*விபத்தில் காயமடைந்தவர்கள் பரிகம, கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழில்.தொடரும் மணல் கொள்ளை





கொழும்பு, மே .13

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் கள்ள மண் கடத்தல் தொடர்ந்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, செம்பியன் பற்று பகுதியில் மக்கள் குடியிருப்புகள் நடுவில் மண் கொள்ளை இடம்பெற்று வருகின்றது. முன்னர் மணல் திட்டாக இருக்கும் பகுதிகளில் இருந்து மணல் எடுத்து செல்லப்பட்டது. தற்போது கிராமப் பகுதியில் அதிகமாக கட்டிடங்கள் அமைப்பதால் மணல் அனுமதி கொடுக்கப்படாத நிலையில் மக்கள் குடியிருப்புகள் நடுவில் கள்ள மண் கடத்தல் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு கள்ள மண் அகழ்வு தொடர்ந்தால் இக் கிராமப்பகுதியில் பாரிய நீர்த்தேக்கம் ஏற்பட்டு மழைக்காலத்தில் உயிர் சேதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என மக்கள் அச்சம் வெளியிட்டுள ளார். (ஐ)

# அமெரிக்கா வரி: 1,000,000 இலங்கை பெண்கள் பாதிப்பு



கொழும்பு, மே .13

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த 44 சதவீத வரிகள் அமுலுக்கு வருமாக இருந்தால், முக்கிய ஏற்றுமதித் துறைகளில் பணிபுரியும் சுமார் ஒரு மில்லியன் இலங்கைப் பெண்கள் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் இழப்பார்கள் என்று ஆசியா நியூஸ் (யுடூ) தெரிவித்துள்ளது.

அமெரிக்க சந்தை மிகவும் இலாபகரமான சந்தைகளில் ஒன்றாக இருப்பதால், பெரும்பாலும் பெண்களைப் பணியமர்த்தும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களான ஆடை, தேயிலை, இரத்தினக் கற்கள், றப்பர் மற்றும் இலவங்கப்பட்டை ஆகியவை புதிய வரிகளால் அதிகம் பாதிக்கப்படும்.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 40 சதவீதத்தை ஆடைத் தொழில் கொண்டுள்ளது.

இத் தொழில் முக்கியமாக கிராமப்புறங்களில் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியைச் சேர்ந்த பெண்களைப் பணியமர்த்துகிறது.

இந்த வேலைகள் வறுமையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு முக்கியமான பாதையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

"பெண் தொழிலாளர்களுக்கு இடையூறாக இருக்கும் அமெரிக்க வரிகளுக்கு எதிரான எங்கள் பிரசாரத்தை மேற்கொள்ள மகளிர் மையம் 25 பிற மகளிர் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளது," என்று அதன் நிர்வாக இயக்குனர் பத்மினி வீரசூரியா கூறினார்.

கட்டணங்கள் நடைமுறைக்கு வந்தால், "அவர்களின் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியம் கணிசமாகக் குறையும்," என்று அவர் மேலும் கூறினார்.

அத்துடன், "ஆர்டர்கள் குறைந்து, சுமார் ஆறு மில்லியன் சார்ந்திருப்பவர்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

தேவை குறைய வாய்ப்புள்ளதால், தொழிற்சாலைகள் ஏற்கெனவே தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வது குறித்து விவாதித்து வருகின்றது.

இந்தியா மற்றும் பங்களாதேஷுடன் ஒப்பிடும்போது, இலங்கை மீது விதிக்கப்பட்ட வரிகள் அதிகமாக உள்ளன. அதனால் இலங்கை பெண்கள் அதிக போட்டியை எதிர்கொள்கின்றனர்.

ஆலைகள் மூடப்பட்டால், பணிபுரியும் சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பெண்கள் பாதிக்கப்படுவார்கள்.

புதிய வரி விதிப்பு அமெரிக்காவிற்கான ஏற்றுமதியை 20 சதவீதம் குறைக்கும், வெளிநாட்டு நாணய வருவாயில் ஆண்டுக்கு சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த பொருட்களின் ஏற்றுமதி 13 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியதால், இது "நாட்டின் வர்த்தக சமநிலைக்கு ஒரு பெரிய அடி" மற்றும் "பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளுக்கு" ஒரு பெரிய அடியாகும் எனவும் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## கிளிநொச்சியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



கிளிநொச்சி, மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் இன்று பல பகுதிகளில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

## நல்லூரில் திலீபனின் நினைவாலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிவைப்பு



யாழ்ப்பாணம், மே 13

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், பொது அமைப்பினர் இணைந்திருந்தனர். வீதியால் சென்ற மக்கள் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கி அருந்திச் சென்றனர்.

# 'குஷ்'ஷுடன் வெளிநாட்டுப் பெண் கைது

கொழும்பு, மே .13

46 கோடி ரூபாய் மதிப்புள்ள "குஷ்" எனும் போதைப்பொருளை தனது பயணப்பொதியில் மறைத்து வைத்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து "கிரீன் சேனல்" (புசநநெ ஊாயநநெட ) வழியாக வெளியேறிக்கொண்டிருந்த ஒரு இளம் வெளிநாட்டு பயணி கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் இந்தப் பெண், திங்கட்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளார். அவர், 21 வயதான பிரித்தானிய பிரஜையாவார்.

திங்கட்கிழமை (12) மாலை 3.45 மணியளவில் தாய்லாந்து பெங்கொக்கில் இருந்து ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.-405 என்ற விமானத்தில், வர்த்தக வகுப்பில் பயணித்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டுவந்த இரண்டு பயணப்பொதிகளில் எவ்விதமான வேறு பொருட்களும் இன்றி, 46 கிலோ கிராம் "குஷ்" எனும் போதைப்பொருள் மட்டுமே இருந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க வரலாற்றில் கைப்பற்றப்பட்ட அதிகளவான "குஷ்" போதைப்பொருள் என்று கட்டுநாயக்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)



# சூதாட்டத்தால் இதுவரை 89 பேர் தற்கொலை




ஆன்லைன் சூதாட்டத்தில் இதுவரை நிகழ்ந்த மொத்த உயிரிழப்பு 89 என்று உயர்ந்துள்ள நிலையில், தடுத்து நிறுத்தப்படுவது எப்போது என்று பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் கேள்வி எழுப்பி உள்ளார்.

சென்னை புழலை அடுத்த புத்தகரம் கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்ற தனியார் வங்கி ஊழியர் ஆன்லைன் சூதாட்டத்தில் ரூ.6 லட்சத்திற்கும் கூடுதலாக பணத்தை இழந்ததால், ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். முருகனை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முருகனைப் போன்றவர்களுக்கு ரூ.6 லட்சம் என்பது மிகப்பெரிய தொகையாகும். வங்கி ஊழியர் என்ற முறையில் ஈட்டிய வருவாயை ஆன்லைன் சூதாட்டத்தில் இழந்திருக்கிறார். அதன்பின் கடன் வாங்கியும் பெருந்தொகையை இழந்த நிலையில், வாங்கிய கடனை அடைக்கவே முடியாது எனும் சூழலில் தான் முருகன் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இடைப்பட்ட காலத்தில் ஆன்லைன் சூதாட்டத்திலிருந்து விடுபட அவர் முயன்றாலும் அவரால் முடியவில்லை. அதனால் தான் ஆன்லைன் சூதாட்டத்தை ஒரு மாய ஆட்டம் என்று கூறி வருகிறேன். இதற்கு உடனடியாக முடிவு கட்டப்பட வேண்டும்.

முருகனின் தற்கொலை கடந்த 5 மாதங்களில் நிகழ்ந்த 12ம் தற்கொலை ஆகும். தி.மு.க., அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்டத்தடை சட்டம் செல்லாது என்று சென்னை ஐகோர்ட் தீர்ப்பளித்த பிறகு மட்டும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 29 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இதுவரை 89 பேர் ஆன்லைன் சூதாட்டத்தால் உயிரை இழந்துள்ளனர். இவ்வளவு பேர் இன்னுயிரை இழப்பதை தமிழக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கக் கூடாது.

ஆன்லைன் சூதாட்டம் தொடர்பான சென்னை ஐகோர்ட் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு செய்து 16 மாதங்களாகின்றன. ஆனால், இதுவரை ஆன்லைன் சூதாட்டத் தடை தொடர்பான வழக்கை சுப்ரீம்கோர்ட்டில் விரைவாக விசாரணைக்கு கொண்டு வந்து ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை பெறுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது தான் இவ்வளவு உயிரிழப்புகளுக்கு காரணமாகும்.

இதை உணர்ந்து ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் குறித்த ஐகோர்ட் தீர்ப்புக்கு தடை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக தடை பெறுவது சாத்தியமில்லை என்றால் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டங்களை தடை செய்வதற்காக புதிய சட்டத்தை சட்ட சபையில் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்கு வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை



குற்றவாளிகள் 9 பேருக்கும் வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை விதித்து நீதிபதி நந்தினி தேவி அதிரடி தீர்ப்பு அளித்தார்.

ரூ.85 லட்சம் இழப்பீடு!

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்க கோவை மகளிர் கோர்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

66 குற்றச்சாட்டுகள் நிரூபணம்!

இந்த வழக்கில் குற்றவாளிகள் 9 பேர் மீது 76 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இதில் 66 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளன.

இழப்பீடு கொடுக்கணும்!

பொள்ளாச்சி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி கோவை நீதிமன்றம் முன்பு மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சாட்சிகளுக்கு சபாஷ்!

குற்றவாளிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்த 50க்கும் மேற்பட்டோரில் யாரும் பிறழ் சாட்சியாக மாறவில்லை.

சாகும் வரை ஆயுள் தேவை!

மத்திய அரசு சிறப்பு வக்கீல் சுரேந்திர மோகன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: பொள்ளாச்சி வழக்கில், கூட்டு பாலியல் வன்புணர்வு மற்றும் மீண்டும் மீண்டும் பாலியல் வன்புணர்வு செய்தல் என்ற 2 பெரிய குற்றங்கள் அடிப்படையில் 9 பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசு தரப்பில் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

9 பேரும் குற்றவாளிகள்!

தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பொள்ளாச்சி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என்று கோவை மகளிர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு அளித்துள்ளது. (ஐ)


## ஏரியில் தீப்பிடித்து எரிந்த விழல்கள்



விழுப்புரம் அருகே பைபாஸ் சாலையோரம் முத்தாம்பாளையம் ஏரி உள்ளது. நேற்று மாலை 6:00 மணிக்கு, திடீரென ஏரியில் இருந்த விழல்கள், செடி கொடிகள் தீப்பற்றி எரிய துவங்கியது. காற்று பலமாக வீசியதால், தீ மளமளவென பரவி ஏரியின் ஒரு பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்தது.

இதனால், சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புகை மூட்டம் ஏற்பட்டு வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். இரவு 8.00 மணி வரை தீ எரிந்து கொண்டிருந்தது. அப்பகுதி மக்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீர்கள், தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மர்ம நபர்களின் தீ வைப்பு காரணமாக ஏரியில் பசுமையாக இருந்த விழல்கள், செடிகள் எரிந்ததோடு, அதிலிருந்த உயிரினங்களும் பாதிக்கப்பட்டது .(ஐ)



## வெள்ளியங்கிரி மலையில் 15 வயது சிறுவன் பலி தரிசனம் முடிந்து கீழே இறங்கும்போது சோகம்

கோவையில் வெள்ளியங்கிரி மலை ஏறிய பின்னர், கீழே இறங்கும்போது சிறுவன் மயங்கி விழுந்து பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஷகோவை மாவட்டம் பூண்டி மேற்கு தொடர்ச்சி மலையில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. 7 மலைகளை கடந்து, சென்று பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருவது வழக்கம்.

இந்த மலை ஏறுவது சிரமம் என்பதால் முதியவர்கள், உடல்நலம் பாதிப்பு உள்ளவர்கள் மலையேற வேண்டாம் என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

இந் நிலையில் வெள்ளியங்கிரி மலை ஏற்றத்தின் போது சிறுவன் மயங்கி விழுந்த பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. பலியான சிறுவனின் பெயர் விஷ்வா. 15 வயதான இவர் பள்ளி மாணவர்.


தமது தந்தை முருகனுடன் அவர் வெள்ளியங்கிரி மலை சென்று சாமி தரிசனம் செய்தார். பின்னர் கீழே இறங்கி வந்து கொண்டிருந்த போது, 3வது மலையில் மயங்கி கீழே விழுந்து பலியானார்.

இதையடுத்து, அவரது உடலை கைப்பற்றிய போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஐ)



# மனமே நீ மாறி விடு!



**சிறு** குழந்தைகளைச் சிறிது நேரம் கூர்ந்து கவனித்தால் ஒரு விஷயம் புரியும். அவை மகிழ்ச்சியாக இருக்கக் காரணமே தேவை இல்லை. குழந்தைகள் எப்போதும் இயல்பாக, உற்சாகமாக இருப்பர். சிறிய பொருள் கிடைத்தாலும் அதை வைத்து மகிழ்ச்சியாக விளையாடுவர்.

வளர வளரதான் நாம் அதை இழந்துவிடுகிறோம், நம் இயல்பு உற்சாகத்தில் இருந்து மாறிவிடுகிறது. ஓர் ஐம்பது வருடங்களுக்கு முன்புகூட மனிதர்கள் ஒரு பண்டிகை, ஒரு சினிமா, கடற்கரை, புதிய உடை, நல்ல உணவு என்று பல விஷயங்களுக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். ஆனால், இன்று எல்லாமே சுலபமாகக் கைக்கெட்டும் தூரத்தில் வந்த பிறகு அந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் காணாமல் போனது. இன்றுள்ள மனிதர்களுக்கு உற்சாகம் என்கிற வார்த்தையே மறந்து போனது. எல்லாமே சலிப்புதான் அல்லது சாதாரணம்தான். ஆங்கிலத்தில் சொல்வதானால் நளநசலவாலைபெ ளை வயமநடெ கழச பசயவெநன மனநிலை. பின் இயல்பான, ஆழமான மகிழ்ச்சியை எப்படிச் சாத்தியமாக்குவது?

அதற்கு சுலபமான வழிதான், சுயபிரகடனம் (ளுநடக வுயடம). நம்மிடம் நாமே பேசிக்கொள்வது. நல்ல வார்த்தைகளை, நல்ல எண்ணங்களை மனதில் விதைத்துக்கொள்வது. இதில் ஒரே ஒரு சவால், நம்மிடம் உற்சாகமும் மகிழ்ச்சியும் இயல்பாக இல்லாததால், இதை நாம் திருப்பித் திருப்பி சொல்லிதான் ஆழ்மனதில் பதிய வைக்க முடியும். இதனால் உங்களுக்கு வேண்டியவாறு எல்லாம் நடக்கச் சிறிது காலம் பிடிக்கும். எவ்வளவு காலம் என்பது நமது முயற்சியைப் பொறுத்தது.

நாமெல்லாரும் சிறு வயதில் வாய்ப்பாடு மனப்பாடம் செய்திருப்போம். ஒன்றிலிருந்து பதினாறாம் வாய்ப்பாடு வரை மனப்பாடமாகக் கற்றவர்கள் நாம். ஆனால் எல்லாருக்கும் இது ஒரே மாதிரி சாத்தியபட்டதா என்றால் இல்லை. நாம் எடுத்த முயற்சிக்கு ஏற்றவாறு ஆளாளுக்கு மனப்பாடம் செய்யும் காலமும் மனப்பாடமாகச் சொல்லும் வேகமும் மாறுபட்டது. அதே போல்தான் நல்ல எண்ணங்களை மனதில் பதிய வைப்பதும்.

இன்னோர் உதாரணம் காரோ அல்லது இரு சக்கர வாகனமோ ஓட்டிப் பழகுதல். ஆரம்பத்தில் பிரேக் போடுவதாகட்டும், கியர் மாற்றுவதாகட்டும் நாம் மிகக் கவனமாகச் செய்ய வேண்டிய ஒன்று. நாளாக நாளாக நாம் இதை ஓர் அனிச்சை செயலாகச் செய்ய ஆரம்பித்து விடுவோம். அப்படியென்றால் வண்டி ஓட்டுவது நம் ஆழ்மனதில் பதிந்து விட்டதெனப் புரிந்து கொள்ளலாம். ஆழ்மனதில் பதிய வைக்க சுலபமான வழி அதைத் திருப்பித் திருப்பிச் செய்வது மட்டுமே. ஒரு முறை பதிய வைத்து விட்டால் அதை மிக அழகாகச் செயல்படுத்தும் திறமை கொண்டது ஆழ்மனம்.

சரி எப்படிப் பதிய வைப்பது என்பது தெரிந்து விட்டது. என்ன பதிய வைப்பது?

உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைச் சொல்லிச் சொல்லி பதிய வையுங்கள்.


சில எச்சரிக்கைகள்.

சொல்லும் அனைத்தும் நேர்மறையாக இருத்தல் அவசியம்.

நீங்கள் மற்றவரைப் பற்றிப் பேசும் போதும் இதைக்கவனத்தில்வையுங்கள். ‘அவனெல்லாம் உருப்படவே மாட்டான்’ என்று யாரையாவது திட்ட தோன்றினால், நினைவில் வையுங்கள், உங்கள் ஆழ்மனதிற்கு அவனைப் பற்றி எல்லாம் கவலை இல்லை. நீங்கள் எது சொன்னாலும் அதை உங்களுக்குத்தான் பரிசளிக்கும். அப்போது உருப்படாமல் போக போவது யார்? சந்தேகமில்லாமல் நாம்தான். அதனால் எப்போதும் எல்லாரிடமும் நல்ல வார்த்தைகளை உபயோகம் செய்யுங்கள், நல்ல எண்ணங்களை மட்டுமே எண்ணுங்கள். சிலர் யாரை வாழ்த்தினாலும் ‘வாழ்க வளமுடன்’ என்பார்கள். இந்த வாழ்த்துகளின் பலன் வாங்குபவரை விட வாழ்த்துபரையே அதிகம் சேரும்.

நமக்காகச் சொல்லும் போதும் ‘நான் எப்போதும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்’ எனச் சொல்வது ஒரு ரகம். ‘கடவுளே நோய் நொடியில் விழாமல் இருக்க வேண்டும்’ எனச் சொல்வது ஒருவிதம். இரண்டுக்குமே அர்த்தம் ஒன்றுதான் என்றாலும் நம் ஆழ்மனது ஒன்று போலப் புரிந்து கொள்ளாது. ஆரோக்கியம் வேண்டுமா, நிச்சயமாக இதோ செய்கிறேன் எனப் பரிசளிக்கும். அடுத்த வேண்டுதலுக்கு நோய் வேண்டுமா, நிச்சயமாக இதோ செய்கிறேன் எனப் பரிசளிக்கும்.

இப்போது கூறுங்கள் இன்று நீங்கள் இருக்கும் நிலமைக்கு யார் காரணம்? சந்தேகமில்லாமல் நீங்கள் தான். என்ன கேட்டீர்களோ அதுதான் கிடைத்தது. எப்படிக் கேட்க வேண்டும் எனத் தெரிந்து கொண்டால் இனி எல்லாம் சுகமே.



# மேயர் வேட்பாளர் உள்ளிட்ட 4 பேர் சுட்டுக்கொலை:மெக்சிகோவில் பதற்றம்



மெக்சிகோவில் வெராக்ரூஸில் வரும் ஜுன் 1 ஆம் தேதி தேர்தல் நடப்பதை ஒட்டி, நேற்று முன்தினம் தேர்தல் பேரணி நடைபெற்றது. இந்த பேரணியில் மொரோனா கட்சியின் மேயர் வேட்பாளராக போட்டியிடும் யெசெனியா லாரா மற்றும் 3 ஆதரவாளர்களுடன் கலந்து கொண்டார். அப்போது யெசெனியா மற்றும் 3 ஆதரவாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த பேரணி சமூக வலைதளத்தில் நேரடியாக ஒளிபரப்பியதால் துப்பாக்கிச் சூட்டில் இருந்து மக்கள் தப்பி ஓட முயன்றபோது ஏற்பட்ட மோதல் காட்சிகள் மற்றும் ஆன்லைனில் வெளியிடப்பட்ட சில புகைப்படங்கள் தரையில் உடல்கள் இருப்பதைக் காட்டின.

மொரேனா கட்சி வேட்பாளர் யெசெனியா லாரா, துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, அவர் தனது பிரச்சார நடவடிக்கைகளின் புகைப்படங்களை பேஸ்புக்கில் பகிர்ந்து கொண்டார், அதனுடன் 'இளைஞர்களின் பலம் என்னை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடக்கத் தூண்டும் ஆற்றல்' என்ற தலைப்பில் பதிவு வெளியிட்டிருந்தார்.

ஆதரவாளர்கள் மொரேனா கொடிகளை அசைத்தபடி, மோட்டார் சைக்கிள் ஊர்வலம் சென்ற போது, அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தது. (ஐ)

## மியான்மரில் ராணுவம் வீசிய வெடிகுண்டு பள்ளி மாணவர்கள் 20 பேர் பலி!



மியான்மரில் ராணுவம் வீசிய வெடிகுண்டு வெடித்து பள்ளி மாணவர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில், ராணுவ ஆட்சி நடக்கிறது. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துவோர், சிறையிலும், வீட்டுக் காவலிலும் அடைக்கப்படுகின்றனர்.

அந்நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில், அரசுக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் போர் நடத்தி வருகின்றன.

கிளர்ச்சி படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில், ராணுவம் போர் விமானங்களை பயன்படுத்தி உக்கிரமான தாக்குதல் நடத்தி வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது கூட, போர் விமானங்களில் சென்று தாக்குதல் நடத்துவதை மியான்மர் ராணுவம் நிறுத்தவில்லை. இதுவரை தாக்குதல் சம்பவங்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் மத்திய மியான்மரின் தபாயின் நகரத்தில் உள்ள கிராமத்தின் மீது ராணுவத்தினர் விமானங்களில் இருந்து தாக்குதல் நடத்தினர். அந்த பகுதியில் இருந்த பள்ளிக்கூடம் மீது ஒரு போர் விமானம் வீசிய வெடிகுண்டு விழுந்து வெடித்தது. இந்த தாக்குதலில், பள்ளி மாணவர்கள் 20 பேர் மற்றும் ஆசிரியர்கள் 2 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். மியான்மரில் உள்நாட்டு போர் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தோனேசியாவில் வெடிகுண்டு வெடித்து 13 பேர் பலி



இந்தோனேசியாவில் காலாவதியான வெடிகுண்டுகளை அழிக்கும் பணியின் போது ஏற்பட்ட வெடிவிபத்தில் ராணுவ வீரர்கள் 4 பேர் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவில் மேற்கு ஜாவா மாகாணம், கருத் மாவட்டத்தின் சாகரா கிராமத்தில், ராணுவ கிடங்கில் நீண்டகாலமாக சேமிக்கப்பட்டு, பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த வெடிபொருள்களை அழிக்கும் பணி நடந்தது.

அப்போது எதிர்பாராத வகையில் விபத்து நடந்துள்ளது. வெடிகுண்டுகளை அழிக்கும் பணியின் போது வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் பொதுமக்கள் 9 பேர், நான்கு இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெடிபொருள் அழிப்பு நடவடிக்கையின் போது உரிய விதிமுறைகள் பின்பற்றப் பட்டனவா என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. (ஐ)

## போரை நிறுத்த நானே காரணம் மீண்டும் அடித்து விடும் டிரம்ப்



இந்தியா - -பாக்., இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு நானே காரணம் என அமெரிக்க அதிபர் டிரம்ப், நேற்று மீண்டும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள அதிபரின் அலுவலக இல்லமான வெள்ளை மாளிகையில், அதிபர் டிரம்ப் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அவரிடம் இந்தியா - -பாக்., இடையிலான போர் நிறுத்தம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில்:

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நடந்த சூழலில், மே 10ல், என் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் உடனடி போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் செய்ய உதவியது.

இரு நாடுகளின் தலைமைகளும் அசைக்க முடியாதவை சக்தி வாய்ந்தவை. சூழ்நிலையின் தீவிரத்தை முழுமையாக புரிந்து கொள்ளும் வலிமை, ஞானம், மன உறுதியை அவர்கள் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே நிறைய உதவிகள் செய்திருக்கிறோம் இன்னும் நிறைய வர்த்தகம் செய்யப்போகிறோம் என அவர்களிடம் தெரிவித்தேன்.

நீங்கள் போரை நிறுத்தாவிட்டால், உங்களுடன் வர்த்தகம் செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்தேன். இதையடுத்து, போரை நிறுத்துவதாக திடீரென அவர்கள் தெரிவித்தனர் அதன்படி, செய்து விட்டனர்.

போரை நிறுத்துவதற்கு வர்த்தகத்தை நான் பயன்படுத்தியது போல, உலகில் யாருமே இதுவரை செய்ததில்லை. இந்த போர் நிறுத்தம் நிரந்தரமாக இருக்கும் என கருதுகிறேன்.

இரு நாடுகளும் நிறைய அணு ஆயுதங்களை வைத்துள்ளன. நாங்கள், ஒரு அணு ஆயுத மோதலை நிறுத்தி இருக்கிறோம். மோதல் தொடர்ந்தால், மோசமான அணு ஆயுதப் போராக மாறி இருக்கும் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.

எனவே, இரு நாடுகளுக்கிடையே போர்நிறுத்தத்துக்கான பணிகளை மேற்கொண்ட அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோருக்கு நன்றி.

இனிமேல், இரு நாடுகளுடனும் அமெரிக்கா நிறைய வர்த்தகம் செய்ய இருக்கிறது. தற்போது, இந்தியாவுடன் வர்த்தக பேச்சு நடத்தி வருகிறோம். விரைவில் பாகிஸ்தானுடனும் பேச்சு துவங்கப் போகிறோம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## மேற்கு ஆப்பிரிக்காவில் பயங்கரவாதிகள் தாக்குதல் அப்பாவி மக்கள் 100 பேர் உயிரிழப்பு



மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினோ பாசோவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று புர்கினா பாசோ. இந்த நாட்டில் ராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இங்கு அல் கொய்தா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

பயங்கரவாத அமைப்புகள் சில ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், வடக்கு புர்கினா பாசோவில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் அல் கொய்தா பின்னணி கொண்ட பயங்கரவாத அமைப்புகள் அதிக எண்ணிக்கையில் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமக்கு வாக்களித்த அனைவருக்கும் முதலில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தத் தேர்தல் முடிவுகள் எம்மைப் பொறுத்த வரையில் ஏமாற்றங்களையோ, ஆச்சரியங்களையோ ஏற்படுத்தவில்லை.

காரணம், வித்தியாசமான அரசியல் சூழலிலேயே நாங்கள் இந்தத் தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். எந்தவிதமான அரசியல் அதிகாரங்களும் அற்ற நிலையில், எம்மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும், எமது செயலாளர் நாயகம் கைது செய்யப்படப் போகின்றார் என்ற ஆதாரமற்ற வதந்திகளும் ஒரு புறம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் வழமை போன்று எமக்கு எதிரான சேறடிப்புக்களும் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். இந்நிலையில் எமக்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது எமது மக்கள் எமது வேலைத்திட்டங்களையும் எமது நடைமுறைச் சாத்தியமான அரசியல் அணுகுமுறைகளையும் ஆதரிக்கின்றார்கள் என்ற செய்தியையே வெளிப்படுத்தி இருக்கின்றது. அந்தவகையில், இந்தத் தேர்தல் முடிவைப் பின்னடைவிலும் ஒரு வெற்றியாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்நிலையிலே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் எமது நிலைப்பாடு பற்றிய கேள்வி பல்வேறு தளங்களில் தற்போது பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

எம்மைப் பொறுத்த வரையில், தேசிய மக்கள் சக்தியும், அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தவிர்ந்த தரப்புக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க எமது ஒத்துழைப்பு அவசியம் எனக் கருதி எம்மை அணுகும் பட்சத்தில் அவை தொடர்பாக சாதகமாக பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம். அவ்வாறான தேவை ஏற்படாத பட்சத்தில், ஆரோக்கியமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி சபைகளில் தனித்துவமாக மக்கள் நலன் சார்ந்து செயற்படுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக் கொள்ளுகின்ற ஜே.வி.பி. கட்சியினருக்கு ஆதரவு தெரிவிக்க மறுப்பதற்கு இனவாதமோ, இன ரீதியான சிந்தைகளோ காரணம் இல்லை என்பதை முதலில் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், எமது மக்களுடைய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கும், எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தேசிய நல்லிணக்கம் அத்தியவசியமானது என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

அதற்காக கடந்த 35 வருடங்களாகத் தொடர்ச்சியாக உழைத்தும் வருகின்றோம். கடந்த காலங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை அரசுகள், எமது தேசிய நல்லிணக்க அணுகுமுறையின் அவசியத்தைப் புரிந்துகொண்டு சாதகமான தமது பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தி வந்தன. ஆனால், தற்போதைய அரசிடம் தேசிய நல்லிணக்கத்தின் அவசியம் பற்றிய புரிதல் கொஞ்சமும் இல்லை என்பதை அவர்களுடைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

அதுமாத்திரமன்றி, அனைவரும் இலங்கையர், எல்லோருக்கும் சமத்துவம் போன்ற வார்த்தைகள் மூலம், எமது தனித்துவங்களையும் அடையாளங்களையும் நீர்த்துப் போகச் செய்து, வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம், தமிழர்கள் தேசிய இனம் போன்றவற்றுக்கான அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கான ஆழமான நிகழ்ச்சி நிரலோடு செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையிலேயே ஜே.வி.பி.யினருக்கு ஆதரவளிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம்.

அதேபோன்று, வெளிப்படைத் தன்மையோடு நடைமுறைச்சாத்தியமான அரசியலை முன்னெடுக்கின்ற தனித்துவமான அரசியல் தரப்பான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம், சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல், நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் வீராப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்ற தமிழ்த் தேசிய முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் நடைமுறையில் சாத்தியமற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரைப் பொறுத்த வரையில் இப்போதுகூட கொள்கை ரீதியான உடன்பாடு, கொள்கை ரீதியான கூட்டிணைவு என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்கள். அவர்களுடைய கொள்கை என்ன என்பது அவர்களுக்கே விளங்கவில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

உதாரணமாக தூய நகரம், தூய்மையான நிர்வாகம் என்கிறார்கள். கடந்த மாகாண சபையிலே ஊழல், மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்களையும், கடந்த காலங்களில் நிதி நிறுவனம் நடத்தி எமது மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டவர்கள் என்ற வலுவான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர்களையும் இணைத்து வைத்துக்கொண்டு தூய்மையான நிர்வாகம் பற்றி அவர்கள் பேசுகிறார்கள்.

ஒற்றையாட்சியையும் எக்கிய இராச்சியத்தையும் நிராகரிக்கின்றோம் என்று கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யாத கட்சிகளோடு ஒட்டவும் மாட்டோம் உறவாடவும் மாட்டோம் என்கின்றார்கள். எக்கிய இராச்சியம் என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்க ஆதரவு கொடுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனை அரவணைத்து உறவாடிக்கொண்டு, குறித்த அரசமைப்பு உருவாக்கத்துக்குப் பங்களிப்பு செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுடனும் செல்வம் அடைக்கலநாதனுடனும் டீல் பேசுகின்றனர்.

இன்னொமொரு வேடிக்கை என்னவென்றால், ஈ.பி.டி.பி. தமிழ்த் தேசிய பரப்பில் செயற்படாத கட்சியாம். எங்களோடு பேசுவது தங்களுடைய கொள்கைக்கு மாறான செயற்பாடாம்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ, சமத்துவக் கட்சி உள்ளங்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு பேசுவார்களாம். அவர்கள் தமிழ்த் தேசியப் பரப்பிலே செயற்படுகிறார்களாம்

தமிழ்த் தேசியத்துக்குப் புறம்பான தரப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை அடையாளப்படுத்துகின்றவர்கள், 2015 ஆம் ஆண்டு வரையில் எமது கட்சியை வழிநடத்திய தலைவர்களுள் ஒருவரான தோழர் அசோக் என்று அறியப்பட்ட சந்திரகுமாருடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அமைக்க டீல் பேசுகின்றனர்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளோடு இணக்க அரசியலில் ஈடுபட்டமையினால் ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவாம். தென்னிலங்கை அரசோடு இணக்க அரசியல் செய்கின்ற கட்சி ஒட்டுக் குழு என்றால், டி.எஸ். சேனநாயக்க காலத்திலேயே இணக்க அரசியல் செய்த உங்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தானே மிகவும் மூத்த ஒட்டுக்குழு.

இவ்வாறு தங்களுடைய செயலுக்கும் சொல்லுக்கும் சம்பந்தமில்லாமல் செயற்பட்டுக் கொண்டு, மக்களின் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக வைத்திருந்து சுயலாப அரசியல் செய்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் சாத்தியமற்றது என்ற அடிப்படையிலேயே எமது தீர்மானம் அமைந்திருக்கின்றது." - என்றார்.

## வல்வெட்டித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெய்வங்களின் உருவங்கள் மின் ஒளி அலங்கரிக்கப்பட்டு பிரமாண்டமாக இருந்தன.

அத்துடன் பத்துக்கும் மேற்பட்ட மேடைகள் அமைக்கப்பட்டு இசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் மாத்தறை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பாடசாலையில் கடமையாற்றும் 38 வயதுடைய ஆங்கிலப் பாட ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவி வைத்திய பரிசோதனைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேற்கொண்டு வருகின்றது.

## நபட்டை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2033ஆம் ஆண்டு முதல் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு ஐ.எம்.எப். தெரிவித்தது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அதை 2028ஆகக் குறைத்து இணக்கப்பாட்டை எட்டியது. எனவே, 2028ஆம் ஆண்டுக்குள் கடனை அடைக்க அதிக அளவிலான பொருளாதார வளர்ச்சி எமக்கு தேவை.

5 வீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேணிச் செல்ல வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அரச வருவாயை அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு கையிருப்புக்களை அதிகரிக்க வேண்டும். இவற்றைச் செய்ய முடியாவிட்டால், நமது நாடு மீண்டும் ஒரு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான துயரத்தை நோக்கிச் செல்லும்.

இந்த யதார்த்தத்தை நாம் புரிந்துகொண்டு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டுக்கு மதிப்பு சேர்க்க வேண்டும்.

நாடு வீழ்ச்சி கண்டால், அது அரசியல், இன, மத அல்லது வர்க்க வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் பாதிக்கும்.

நாட்டுக்குப் பெறுமானம் சேர்க்கும் நடவடிக்கை கல்வி, சுகாதாரம், தொழில், விவசாயம், சேவைகள் போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

புதிய வாய்ப்புகளைத் தேட வேண்டும். வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாது, செயல்களாலும் அபிவிருத்தியை யதார்த்தமாக்க வேண்டும்.

இலவசக் கல்வி மூலம் நாட்டின் சிறார்களுக்கு நவீன கல்வியை வழங்குவது நம் அனைவரின் பொறுப்பாகும். உலகின் மிகவும் அபிவிருத்தி கண்ட நாடுகளைப் பார்க்கும்போது, அந்த நாடுகளின் கல்வி முறைகள் மிகவும் வலிமையானவை என்பதைக் காண்கின்றோம். அங்கு புதுமைகள் மற்றும் நவீனம் காலத்துக்கு காலம் உட்புகுத்தப்படுகின்றன. சர்வதேச தொழிலாளர் சந்தைக்கு ஏற்ற பாடத்திட்டத்தை உருவாக்குவதாலும், புதிய கல்வி முறைகள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு நவீன கல்வியை வழங்குவதாலும், அபிவிருத்தி கண்ட நாடுகள் கல்வித் துறையில் உச்சத்தை எட்டியுள்ளன.

பின்லாந்து, தென் கொரியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

நவீன உலகில், பல நாடுகள் நவீன கல்வியில் பயன்படுத்தும் உபகரணங்கள் நமது நாட்டில் பயன்படுத்துவதில்லை. நமது நாட்டின் இலவசக் கல்வி முறையில் ஸ்மார்ட் திரைகள், கணினிகள், டேப்லெட் கணினிகள் போன்றவை பயன்பாட்டில் இல்லை. கல்வியை மனித உரிமையாக்கி, அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நாம் உறுதிபூண வேண்டும். இலவசக் கல்வியும் இலவச சுகாதாரமும் மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களாகும். எனவே, இவை மனித உரிமைகளாக அமைந்து காணப்பட வேண்டும். இதில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, கல்வி மற்றும் சுகாதார உரிமைகளும் அடங்க வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது குறித்து நாம் பேசி வருகிறோம். இதற்கு தனிநபர் பங்களிப்பைக் கணக்கிட வேண்டும். இதைச் சரி செய்ய நாம் தனி நபர்களினது திறன்களையும் மனித வள மேம்பாட்டையும் வலுப்படுத்த வேண்டும். இதற்கு ஏற்றாற் போல் இலவசக் கல்வியை மேம்படுத்த வேண்டும்." - என்றார்.

# கல்கிஸை இளைஞர் சுட்டுக்கொலை: இரண்டு சந்தேகநபர்கள் சிக்கினர்!

கொழும்பு, மே 13

கொழும்பு - கல்கிஸைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கல்கிஸை மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 21 மற்றும் 32 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்கிஸை, சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 5 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றுக்கு முன்னால் இருந்த இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றனர்.

இதன்போது அந்த இளைஞன் அங்கிருந்து தப்பிச் சென்று நீண்ட தூரம் ஓடினார்.

ஆனால், துப்பாக்கிதாரிகள் இளைஞரைத் துரத்திச் சென்று நடுவீதியில் வைத்து சுட்டுக் கொலை செய்தனர்.

தெஹிவளை, ஓபன் பிளேஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்தார் எனக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் கல்கிஸை பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2025 வெளியிடப்பெற்றது.